1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தடுப்பு நடவடிக்கை எடுக்க ரூ. 27,200 செலவாகும். முள் வேலி போடவேண்டும் என்பதுதான் திட்டம். அதைப் போட்டால் சரியாகிவிடும்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

**** 223 வினு.—திரு. எம். சுரேந்திரன்:*** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மின்சார இணைப்பு வழங்குவதற்கு, மின்சார இணைப்பு பெறுவோரிடம் கடன் பெறுவது என்ற மின்சார வாரியத்தின் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், விவசாய உடைமைகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) & (இ): மின்சார இணைப்பு பெற விரும்புபவர்கள் தாமாகவே முன் வந்து வழங்கும் கடன்களைத் திரட்டுவதற்கென தமிழ்நாட்டு மின்சார வாரியம் வகுத்தனுப்பிய ஒரு திட்டத்திற்கு 23—9—1968 அன்று அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. இந்த ஆணை இப்போது திரும்பப் பெறப் பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, கேள்வியில், 'விவசாய உடைமைகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதா' என்றதற்கு பதில் சொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அவற்றையெல்லாம் ஆராய்ந்து தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**** 224 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:*** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

மின்சார கம்பங்கள் தயாரிப்பதை மின்சார வாரியமே தயாரித்துக் கொள்ள அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: மின்சார வாரியத்துக்குத் தேவையான வலுப்படுத்தப்பட்ட சிமென்ட் கற்கலவைக் கம்பங்கள் (R.C.C. Poles) மின்சாரத் துறையாலும் ஒப்பந்தக் காரர்கள் மூலமாகவும் தயாரிக்கப்படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அப்படி யிருந்தும், சிதம்பரம் தாலுகாவில் இன்னமும் மின்சாரக் கம்பங்கள் இல்லை என்று பொதுமக்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறது. என்னுடைய ஊரிலேயே அப்படி யிருக்கிறது. ஆகவே, உடனடியாக இல்லாத ஊர்களுக்கு கம்பங்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அந்த அபிப்பிராயம் தவறான அபிப்பிராயம் என்று கூறிவிட்டார்களே.